**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 99/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 மருதை – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) 1950 ல் பிரதிவாதிகள் கிரையம் பெறும்போது 2 கிணற்றை கிரையமாக பெற்றுள்ள நிலையில், எனது நிலம் நஞ்சை நிலமாகத்தான் இருக்கும் என்றால் சரியல்ல, புஞ்சை நிலம்தான். எனது நிலத்தில் கிணறு இல்லை என்றால் சரிதான். 1950 ல் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற போது அவர்களது ஆவணத்தின் நான்கு எல்லை விவரத்தில் சங்கன் நிலத்துக்கு வடக்கு என கண்டுள்ள நிலையில், அதன் வடக்கே உள்ள நான் கிரையம் பெற்ற 30 செண்ட் சங்கனுக்கு சொந்தம் இல்லை என்றால் சரியல்ல. சங்கன் தனது மகனுக்கும், மகளுக்கும் நான் சொல்வது போல உயில் ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றும், தான செட்டில்மென்ட்தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியாக ஞாபகமில்லை. எனது கிரைய ஆவணத்திலேயே தான செட்டில்மென்ட் ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. நான் மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணத்தை தாக்கல் செய்தால் அந்த நிலம் சங்கனுக்கு எவ்வாறு பாத்தியம் என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால், மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணத்தை மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல.

2) 2022 ம் வருடம் பிரதிவாதிகள் நான் உழவடை செய்த போது பிரச்சினை செய்து தங்களது 1950 ம் வருட கிரைய ஆவணத்தை காட்டியும், அதுகுறித்து நான் பொன்னனிடம் எந்த விபரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நிலம் பிரதிவாதிக்கு சொந்தம் என்பதால்தான் பொன்னனிடம் அதுபற்றி கேட்கவில்லை என்றால் சரியல்ல. சுமார் 10 வருடத்திற்கு முன்புவரை பிரதிவாதிகள் வாய்க்கால் அமைத்து 60 செண்ட் நிலத்தில் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. சங்கன் கிரையம் வாங்கிய ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்யவில்லை. சங்கன் 30 செண்ட் நிலத்தை பிரதிவாதிகளிடம் இருந்து மோசடியாக பெற்றார் என்றும், அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லாததால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1950 ம் வருடம் பிரதிவாதிகள் 60 செண்ட் கிரையம் பெற்றது முதல் தற்போதுவரை எந்த வில்லங்கமோ, பரிவர்த்தனையோ செய்யவில்லை என்றால் சரியல்ல. 60 செண்ட் நிலத்திற்கான வருவாய்துறை ஆவணங்கள் அவர்கள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. 3) இவ்வழக்கில் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரிந்தே நான் அதை பொன்னன், வள்ளியம்மையிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**